REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—6 (7 காசுகள்) ★ இணைப்பில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
ஐந்தாம் ஆண்டு மலர்
சென்ற ஆண்டினும் சிறப்பாக
15-6-57 அன்று வெளிவருகிறது
★
விவரங்கள் அடுத்து?

மலர் 4] சென்னை: வைகாசி 29௳ திங்கள் (10—6—57) ★ ★ வெளியூர்: வைகாசி 29௳ செவ்வாய் (11—6—57) [இதழ் 309

தமிழ் நாட்டில் கிளர்ச்சிகள் :

'தி. மு. கழகம் ஈடுபட்டாலன்றி வெற்றிபெற முடியாது'

'கொளுத்திவிடும் வாண வெடிக்கும் ஏற்றி வைத்த விளக்கிற்கும் வித்தியாசம் உண்டு'

'தேர்தல் கால தெளிவின்மை நீடிக்க வேண்டாம்'

'தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்கு அனைவரும் சேர்ந்து போராடலாம்'

சோஷலிஸ்டுகளின் உத்தேச போராட்டம் பற்றி அண்ணா கருத்துரை

"வரும் ஆக்ஸ்டு மாதத்தில் சோஷலிஸ்டுகள் தமிழ் நாட்டில் ஒரு போராட்டம் நடத்தப் போவதாக டாக்டர் லோகியா கூறியிருப்பதைப் பத்திரிகையில் பார்த்தேன்.

"அந்தப் போராட்டம், தமிழகத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டும் என்பதற்காகவும்தான் நடத்தப்படும் என்று அவர் கூறியிருக்கிறார்.

"நான் அதைப் பார்த்து ஒருபுறம் மகிழ்ச்சியடைந்தேன்; மறுபக்கம் வெட்கப்பட்டேன். தமிழ் நாட்டிற்குத் 'தமிழ் நாடு' என்ற கிளர்ச்சியை நடத்தவிருப்பது கண்டு மகிழ்ச்சியடைந்தாலும், அக்கிளர்ச்சியை நடத்த வடநாட்டிலுள்ள ஒரு லோகியா தான் வரவேண்டும் என்று நினைக்கும்போது மறுபக்கம் வெட்கப்பட்டேன்.

"ஆனால், நான் இந்தக் கூட்டத்தின் மூலமாக லோகியா அவர்களுக்கு ஒன்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நீங்கள் நடத்தப்போகும் கிளர்ச்சி வெற்றிபெற வேண்டிய முறையில் நடத்தப்படவேண்டும்; அதற்கான முறையில் கிளர்ச்சியின் முறைகளை வகுக்க வேண்டும்; ஏன் அவ்வாறு கூறுகிறேனென்றால், தேர்தல் நேரத்தில் தமிழ் நாட்டில் சோஷலிஸ்டுகள், அரசியல் தெளிவில்லாமல், 'எங்களுக்கு யாருடனும் ஒட்டும்—உறவும் வேண்டாம்' என்று கூறி, திராவிட முன்னேற்றக் கழகத்துடன் சில இடங்களில் போட்டியிட்டும், சில இடங்களில் பூசலை ஏற்படுத்தியும் தேர்தலில் ஈடுபட்டார்கள்—அப்படியே இப்பொழுதும், 'எங்களுக்கு யாருடைய ஒட்டும் - உறவும் வேண்டாம்; நாங்களே தனித்துப் போராடுவோம்' என்ற வகையில் கிளர்ச்சியை நடத்துவார்களோ என்பதால்தான். நீங்கள் துவங்கும் கிளர்ச்சி வெற்றி பெறத்தக்க வகையில் நடத்தப்படவேண்டும்' என்று கூறுகிறேன்.

"நீங்கள் துவங்கும் கிளர்ச்சி நல்ல வகையில் நடத்தப்படவேண்டும்—வெற்றிபெற வேண்டும் என்றால், இங்கு தமிழ் நாட்டிற்கு 'தமிழ் நாடு' என்ற பெயர் வைக்கப்பட வேண்டும் என்ற கொள்கைகளை யார் யார் கடைப்பிடிக்கிறார்களோ—பாருங்கெல்லாம் அந்தக் கொள்கை உடன்பாடானதோ அவர்களையெல்லாம் ஒன்று திரட்ட வேண்டும்; அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து நடத்தும் போராட்டமாக இருந்தால்தான் போராட்டம் வெற்றி பெறும். இதை உள்ளூர் சோஷலிஸ்டுகள் முதலில் உணர வேண்டும்; அதன்படி செயலாற்ற முன்வரவேண்டும்."

—என்று, அண்ணா அவர்கள், சென்னை—பீமண்ணன் பேட்டை வள்ளுவர் கல்விக் கழக ஆண்டு விழாவில் 9—6—57 அன்று மாலை பேசும்போது குறிப்பிட்டார்கள்.

மேலும் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர் லோகியாவைப் பொறுத்தவரையில், அவர் நல்லவர்-அவ்வளவுதான். ஏன் 'நல்லவர்' என்ற அளவோடு நிறுத்திக் கொண்டேன் என்றால், நான் அவரைச் சந்தித்துப் பேசியபோது கண்டேன்—அவரிடம் இங்குள்ள நிலைமைகளை யாரும் எடுத்துக் கூறவில்லை. உள்ளூர் சோஷலிஸ்டுகள் தமிழ்நாட்டின் ஒருசில நிலைமைகளை அவருடைய செவியில் புகாதவண்ணம் பார்த்துக்கொள்கிறார்கள்—ஆனால், அவர் நல்லவர்தான்.

"அதனால்தான் அவருக்கு ஒரு உண்மையை தெளிவாக்க விரும்புகிறேன்—தமிழ் நாட்டில் எந்த ஒரு கிளர்ச்சியும் வெற்றிபெற வேண்டுமானால் அக்கிளர்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டால்தான் வெற்றிபெற முடியும்."

"நான் இப்படிக் கூறுவதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்தான் 'அசகாய சூரர்கள்' என்பதோ, அல்லது தி. மு. கழகத்திடம்தான் வீரம் உண்டு என்பதோ அல்ல; திராவிட முன்னேற்றக் கழகம்தான் இந்த நாட்டு மக்களிடம் இடைவிடாத தொடர்பு, தோழமையோடு கூடிய தொடர்பு கொண்ட கழகமாகும். அதனால்தான் தமிழ் நாட்டில் எந்த ஒரு கிளர்ச்சியும் வெற்றி பெறவேண்டும் என்றால், அதில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும் என்று கூறுகிறேன்.

"வேண்டுமானால் தமிழ் நாட்டில் சில கிளர்ச்சிகள் வெடிக்கலாம்; ஆனால் அவை வெற்றி பெற முடியாது.

"வாணம் வெடிக்கப்படலாம்; அப்போது அழகான ஒளிகூடக் கிளம்பலாம்; நல்ல வாண வேடிக்கைக்காரர்கள் வெடித்தால், வெடிக்கிற வாணம் பூக்கள்போலக்கூட உதிரலாம்; ஆனால், வெடித்து சிறிதுநேரம் ஒளிதரும் வாணம், மறுகணம், முன்னிருந்த இருட்டைவிட அதிகமான இருளைத்தான் ஏற்படுத்துமே தவிர ஒளி தராது. ஆனால், சின்னஞ் சிறு ஒளி விளக்கு அப்படிப்பட்டதல்ல; விளக்கு சிறிதானாலும், அது இருக்கும் இடத்திற்கு மங்காது ஒளிதரும். ஆனால், வாணம் அப்படிப்பட்டதல்ல!

"எனவே, கொளுத்திவிடுகிற வாணத்திற்கும், ஏற்றி வைக்கப்பட்டுள்ள விளக்கிற்கும் பலன் தரும் விஷயத்தில் ஏராளமான வித்தியாசம் உண்டு. திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றி வைக்கப்பட்டுள்ள விளக்காகும். விளக்கு சிறிதாகக்கூட இருக்கலாம்—ஆனால் ஒளி தரும் விளக்காகும்.

"மேலும், விளக்கு இருந்தால் வாணம் கூட விடலாம்—கொஞ்சநேரம் வேடிக்கையும் பார்க்கலாம்; வேடிக்கை தீர்ந்ததும் விளக்கு இருக்கிறது, வெளிச்சம் தர!

"எனவே, வேறு கட்சிக்காரர்கள் வேண்டுமானால், வாண வேடிக்கை போல கிளர்ச்சிகளை வெடிக்கலாம்—ஆனால், அவை பயன் தராது!

"அதனால்தான் கூறுகிறேன்—தமிழ் நாட்டில் ஏதேனும் கிளர்ச்சிகள் வெற்றிபெற வேண்டுமானால் ஏற்றி வைக்கப்பட்டுள்ள விளக்கு போன்ற—மக்களுடன் இடைவிடாத தொடர்பு கொண்ட தி. மு. கழகம் அதில் ஈடுபட வேண்டும்;—என்று!

"தேவை இல்லை; நாங்களே தான் போராட்டத்தை துவக்குவோம்; நான் ஒன்றுக்கு மூன்று பேர்—வருடம் முழுவதும் நடக்கும், என்று சோஷலிஸ்டுகளும் கூறுவார்களேயானால் நடத்தட்டும்."

1986-ல் இந்தியாவின் மக்கள் தொகை

59 கோடியாக இருக்கும் என அபாய அறிவிப்பு!

புதுடில்லி, ஜூன் 10—

1986-ம் ஆண்டில் இந்தியத் துணைக் கண்டத்தின் மக்கள் தொகை எவ்வளவாக இருக்கும்?

சுமார் 59 கோடியாக இருக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்களாம்!

பிரின்ஸ்டன் பல்கலைக் கழக மக்கள் தொகை ஆராய்ச்சி அலுவலகத்தினர் இந்தக் கணக்கெடுப்பை நடத்தி, ஓராண்டுக்கு முன்பே இவ்வாறு அறிவித்துள்ளனராம்!

மரண விகிதத்தில் 50 சத விகித இறக்கம் ஏற்படும் என்றும், ஆனால், ஜனன விகிதத்தில் 30 சத விகித இறக்கமே ஏற்படக்கூடும் என்றும் கணக்கெடுப்பு நடத்திய ஏ. ஜேகோல் மற்றும், ஈ. எம். ஹூவர் என்பவரும் கருதுகின்றனராம்.

கேட்டீரா, சேதி!

புதுடில்லி, ஜூன் 8—

ரூ. 50,000 மதிப்புள்ள சொத்துக்களை 70 வயதுள்ள பாபன் என்ற பெயருடைய கிராமவாசி, தனக்குப் பிறகு அந்த சொத்துக்களை அடைய குழந்தைகள் இல்லாததால் பண்டித நேருவுக்கு எழுதிவைத்துள்ளாராம்!

சென்னையின் கோரிக்கை கவனிக்கப்படுமாம்!

சென்னை, ஜூன் 10—

சென்னை மாநிலத்தில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைச் சமாளிக்க அதிக அளவில் உணவுத் தானியங்களை ஒதுக்குமாறு மத்திய அரசாங்கத்திடம் சென்னை கேட்டுக் கொண்டுள்ளதாம்.

இந்த கோரிக்கை கவனிக்கப்படும் என்றும், உணவுப் பங்கீடு முறை அமுல் செய்யப்பட மாட்டாது என்றும் மத்திய உணவு அமைச்சர் ஜெயின் தெரிவித்துள்ளார்.

சீனாவின் மக்கள் தொகை

அபாயகரமான அளவில் அதிகரித்துவருகிறதாம்

பீகிங், ஜூன் 10—

"சீனாவின் மக்கள் தொகை இப்போது அதிகரித்துக் கொண்டு வரும் வேகத்திலேயே நீடிக்குமானால், இன்னும் 50 ஆண்டுக் காலத்திற்குள்ளாக இன்று உலகில் எத்தனை கோடி மக்கள் வாழ்கிறார்களோ அத்தனை கோடி மக்கள் சீனாவில் இருப்பர்"

என்று, சீனாவின் பிரபலமான பொருளாதார நிபுணரான மாயிங்-சூ என்பார் கூறியிருக்கிறாராம்.

இப்போது சீனாவில்தான் உலகின் நான்கில் ஒரு பகுதி மக்கள் வாழ்கிறார்கள் என்றும், 1955-ம் ஆண்டு இறுதியில், பார்மோசா உட்பட சீனாவின் மக்கள் தொகை சுமார் 63 - கோடியாக உயரும் என்றும் கணக்கிடப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

'வரதட்சணைக்கும் வரம்பு வேண்டும்'

மாதர் மாநாடு கோரிக்கை

விசயவாடா, ஜூன் 8—

பெண்களுக்கும் வாரிசு உரிமை அளிக்கப்பட்டிருப்பதால், பெண்களுக்கு ஏராளமான தொகை வரதட்சணையாக ஒதுக்கிவைக்க வேண்டியுள்ளது என்றும், எனவே, வரதட்சணைக்கும் ஒரு வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் இந்திய மாதர் மாநாடு கோரியுள்ளது.

கலைஞர்களுக்கு உதவி!

சென்னை, ஜூன் 10—

வயதான காலத்தில் தவறும் நிலையிலுள்ள கலைஞர்களுக்கென சென்னை, சங்கீத நாடகசங்கம் நிலைஞர்களுக்கு மாதம் ரூ. 50 உதவியளித்து வரும் திட்டத்தை நீடித்துள்ளது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 10—6—57 திங்கள்

நிலை தரும் விளக்கம்

★

“தமிழ்ப் பகுதிகளுக்குப் பூரண சுதந்திரத்துடன் கூடிய ஒரு பெடரல் ஆட்சி முறை வேண்டும்;

“சிங்களம் மட்டுமே இலங்கையின் ஒரே ஆட்சிமொழி, அரசாங்க மொழி என்ற சட்டம் ரத்து செய்யப்படல் வேண்டும்;

“தமிழர்களே பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளில் சிங்களவரைக் குடியேற்றுதல் போன்ற சிங்கள மயமாக்கும் போக்கினைக் கைவிடுதல் வேண்டும்;

“இலங்கையில் குடியேறியுள்ள தமிழர் அனைவருக்கும் குடியுரிமை வழங்க வேண்டும்.”

என்ற நான்கும், இலங்கை தமிழரசுக் (பெடரல்) கட்சியின் கோரிக்கைகளாகும்.

இலங்கையில் சிறுபான்மையினரான தமிழர்களை, பெரும்பான்மையினரான சிங்களவர், தங்களது பெரும்பான்மை பலத்தைக் கொண்டு சகல துறைகளிலும் நசுக்கி வருகின்றனர்; சிங்களவர்களின் பாசிச வெறிகொண்ட நடவடிக்கைகள் மிகக் குறுகிய எதிர்காலத்தில் தமிழினத்தின் தனித்தன்மையை அழித்துவிடும் என்ற இயற்கையான அச்சத்தால் உந்தப்பட்ட நிலையில், இதிலிருந்து தப்புவதற்கு, எங்களது கோரிக்கைகள் ஈடேறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று வாதிடுகின்றனர், தமிழரசுக் கட்சியினர்.

ஆட்சியிலிருக்கும் பண்டாரநாயகாவோ, நிர்வாக முறைகளை பரவலாக்குவதற்காக, சில பிரதேசக் ‘கவுன்சில்’களை அமைக்கிறேன், தமிழ் மொழி நியாயமான அளவு உபயோகப்பட வழி செய்கிறேன், எல்லா மக்களுக்குமாக சில அடிப்படை உரிமைகளை அரசியல் சட்டத்தின் மூலம் வழங்குகிறேன், அவ்வளவே’ என்று கூறி நிறுத்திவிட்டார், தமிழரசுக் கட்சியினரின் கோரிக்கைகள் பற்றிக் கருத்தறிவிக்குமாறு கேட்டபோது.

முன்னாள் பிரதமரான டட்லி சேனநாயகா, இந்தக் கோரிக்கைகள்பற்றிப் பேசுகையில், இவை எங்களால் (சிங்களவரால்) ஒப்புக்கொள்ள முடியாதன; வேண்டுமானால், மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒரு வட்டமேஜை மாநாடு கூட்டலாம் என்று கூறிவிட்டிருக்கிறார்.

இலங்கை ஜனநாயகக் காங்கிரசின் தலைவரான தொண்டமான் இருதரப்பாரும், ஓராண்டு பொறுத்திருக்கவேண்டும்; தமிழரசுக் கட்சியினர் தங்கள் கோரிக்கைகளுக்காக நடத்தப் போவதாக அறிவித்துள்ள அறப்போராட்டத்தை ஓராண்டுக்கு ஒத்திவைக்கவேண்டும்; அதேபோல சர்க்காரும் தங்களின் ‘சிங்களம் மட்டுமே’ சட்டத்தை அமுல்செய்யாமல், ஓராண்டுக்கு ஒத்திவைக்க வேண்டும்; என்று ஒரு யோசனை கூறியிருக்கிறார்.

இப்படிப் பலரும் தங்கள் கருத்துக்களை அறிவித்துக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் தமிழரசுக் கட்சியினர் தாங்கள் திட்டமிட்டிருக்கிற அறப்போராட்டத்தினை ஆகஸ்டுத் திங்களில் நடத்தியே தீருவது என்ற முடிவுடன், போராட்டத்திற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்த வாரத்தில் இலங்கைத் தமிழர்வாழ் பகுதி எங்கும் ‘சிங்களம் மட்டுமே’ சட்டமியற்றப்பட்ட முதலாண்டு பூர்த்தி, துக்கநாளாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் உணர்ச்சிகளை அளவிட அந்தத் துக்கநாள் கொண்டாட்டங்கள் சர்க்காருக்கு உதவியிருக்க வேண்டும்.

ஆனால் சர்க்காரே, பண்டாரநாயகாவின் தலைமையில் தமிழர் அறப்போராட்டத்தை அடக்குவதற்காகவென்று ஒரு ‘குண்டர் படை’ திரட்டப்போவதாக வெளிவந்துள்ள செய்திகள், இலங்கையில் உருவாகிக் கொண்டிருக்கும் சூழ்நிலைகளை அறிய உதவுகின்றன.

தமிழரசுக் கட்சியினரின் கோரிக்கைகளில் அடங்கிக் கிடக்கும் நியாய அநியாயங்களை ஆராய்ச்சி செய்வதற்கு முற்படுகிற பெரிய மனிதர்களும் பரந்த மனம் படைத்தவர்களும் முதலில் செய்ய வேண்டிய காரியம் ஒன்று உண்டு. இந்தக் கோரிக்கைகள் எழுவதற்குக் காரணமாக இருக்கும் அச்சம் தமிழ் மக்கள் உள்ளத்தில் ஊட்டப்பட்டது, பண்டாரநாயகாக்களின் முழுக்க முழுக்க சிங்கள வெறி கொண்ட நடவடிக்கைகள்தான் என்பது உண்மையா அல்லவா என்று கண்டறிவது தான் அந்தக் காரியம்.

பண்டாரநாயகாவும் அவர் தலைமை தாங்கி நடத்தும் சர்க்காரும் மிகமிக மட்டரகமான— ஆனால் மித மிஞ்சிய சிங்கள இன, மொழி வெறியுணர்ச்சியினால் வழிநடத்திச்செல்லப்படுகிறார்கள் என்பதற்குச் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்ற சட்டத்தைத்தவிர வேறு சான்றும் வேண்டுமா?

தங்கள் ஆதிக்கத்தில் சிக்கிவிட்ட சிறுபான்மை இனம் ஒன்றை தங்களுக்கு இருக்கும் அசுர பலத்தால் மிருகவெறியோடு அழித்துப் பூண்டற்றுப் போகச் செய்ய, பண்டாரநாயகாக்களுக்கு ஆட்சியைத் தேடித்தந்திருக்கும் சிங்கள வெறியர்களின், மிருகத்தனமான, காட்டுமிராண்டித்தனமான, மிலேச்சத்தனமான தாக்குதல்களுக்கு ஆளாகிவிட்ட தமிழ் மக்கள், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற இயற்கையான அச்சத்தால், பாதுகாப்பு உணர்ச்சியால் எழுப்பும் கோரிக்கைகளை அநியாயம் என்று கூறுவதற்கு முன், அவர்கள் கோரிக்கைகளை எழுப்பிவைத்திருக்கும் அடிப்படையைய, நியாயவான்கள் சற்று கவனித்துத்தான் ஆகவேண்டும்.

இலங்கையில் உருவாகிவரும் நிலைகள் தரும் விளக்கம் அதுதான்.

நில உடமை வரம்புச் சட்டத்திலிருந்து தப்ப!

கேரள சட்ட மந்திரியின் முயற்சி!

மலையாள பத்திரிகையில் பகிரங்க குற்றச்சாட்டு

அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் கேரள கம்யூனிஸ்டு சர்க்கார் நிலச் சீர்திருத்த மசோதாக்கள் கொண்டுவர இருப்பதை அறிந்த கேரள மந்திரி ஒருவர் அந்தச் சட்டத்திலிருந்து தப்புவதற்காக அவசர அவசரமாக தனது சொந்தச் சொத்துக்களை விற்றுக் காசாக மாற்றிவருவதாக மலையாளப் பத்திரிகை ஒன்றில் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பதாக ‘தின மலர்’ என்ற நெல்லை தமிழ் தின இதழ் செய்தி ஒன்று வெளியிட்டிருக்கிறது தனது 6—6—57-ந் தேதிய இதழில்.

அந்தச் செய்தியில் காணப்படுவதாவது:—

கேரள சட்டசபைக்கு சுயேச்சை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கம்யூனிஸ்டு மந்திரி சபையில் சட்ட மந்திரியாக பதவி வகித்துவரும் வி. ஆர். கிருஷ்ணய்யர் ஒரு பெரிய நிலப் பிரபு. நில உடைமை உச்சவரம்பு மசோதா வருமுன்னர் தலைச்சேரியில் உள்ள தனது சொந்த சொத்துக்களை விற்றுவிடுவதில் அவர் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்.

அவருக்குச் சொந்தமான எஸ்டேட் ஒன்றை 1½ இலட்சம் ரூபாய்க்கு விலை பேசி அதனை விற்பனை செய்வதற்கு தமது அந்தரங்க குமாஸ்தாவிற்கு அத்தாட்சிப் பத்திரமும் வழங்கியிருக்கிறாராம். இதற்காக திருவனந்தபுரம் ஜில்லா ரிஜிஸ்திராரை தனது இல்லத்திற்கு வரவழைத்து மந்திரி பிரஸ்தாப அத்தாட்சிப் பத்திரத்தைத் தயார் செய்தாராம்.

மந்திரியின் வேறொரு சொத்தை கைமாற்றுவதற்கு தந்தைக்கு அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்டதாகவும் தெரிகிறது.

மந்திரியின் தந்தையினது சொத்துக்களை பாகப் பிரிவினை செய்யும் வேலையும் இப்போது தீவிரமாக நடைபெற்றுவருவதாக அந்தப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

சென்னை-ஆந்திர எல்லைத் தகராறு

ஆந்திர பிரதிநிதிகள் மகசர்

ஐதராபாத், ஜுன் 8—

ஆந்திர மாநில ரெவின்யூ அமைச்சர் தலைமையில் ஆந்திர பிரதிநிதிகளின் மாநாடு நடைபெற்றுள்ளது. எல்லைத் தகராறு பற்றி விவாதித்து ஒரு மகசர் தயாரித்துள்ளனர். அந்த மகசர் விசாரணை நடத்தவரும் படாஸ்கர் வசம் கொடுக்கப்படுமாம்.

திருத்தணி சென்னையுடன் சேரவேண்டும் என்று நடத்தப்படும் கிளர்ச்சி அர்த்தமற்றது என்றும், எல்லைத் தகராறு அரசியல்வாதிகள் கிளப்பியுள்ளது என்றும், பாலாறு சரித்திர காலத்தில் எல்லைக்கோடாக இருந்துள்ளது என்றும், ஒசூர், சித்தூர் பகுதிகளும் ஆந்திரர்களைச் சேர்ந்ததே என்றும் அந்த மகசரில் கூறப்பட்டுள்ளதாம்.

படாஸ்கரின் சிபாரிசுகளை ஆந்திரம் ஏற்கும் என்று முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதி ஆலோசனைக் குழுவின் முடிவுகள்

தேங்கிக் கிடக்கும் நூல்கள் நிலை

புதுடில்லி, ஜுன் 7—

பல நூல் ஆலைகளில் நூல்கள் தேங்கிக் கிடப்பதாக தென்னிந்திய ஆலை அதிபர் சங்கத்தின் தலைவர் மத்திய தொழில் அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களிடம் முறையிட்டுள்ளார்.

நூல் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் ஆலைகளுக்கு அதிக நூற்பு கதிர்கள் ஒதுக்குவது பற்றி யோசித்து மத்திய அரசாங்கம் முடிவை தெரிவிக்குமாம். அதிகப்படியாக உற்பத்தி செய்யப்படும் நூல் முழுவதும் ஏற்றுமதிக்கு ஒதுக்கப்படும் என்று மத்திய தொழில் அமைச்சர் வாக்குறுதி அளித்துள்ளார்.

சம்பளத்தை குறைத்துக்கொள்ளத் தயாராம்!

ஒரு எம்.பி. யோசனை

புதுடில்லி, ஜுன் 7—

நாட்டின் பொருளாதார அருமையை மனதில்கொண்டு, ஒரு மக்கள்சபை உறுப்பினர் தமது சம்பளத்தைக் குறைத்துக் கொள்ள தாம் முன்வந்திருப்பதாக பண்டிதருக்குக் கடிதம்எழுதியுள்ளாராம்.

உ. பி.-யைச் சேர்ந்த நவாப் சிங் சாஹன் என்ற அந்த உறுப்பினர், மாதந்தோறும் தம் சம்பளத்தில், ரூ. 50 குறைத்துக் கொள்வதாக எழுதியிருக்கிறாராம்.

இவரது முன்மாதிரியைப் பண்டிதர் மிகவும் பாராட்டுவதுடன் இந்த விஷயம் குறித்து, காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சிக் கூட்டத்தில் பேசலாம் என்றும் கூறியிருக்கிறாராம்.

டில்லிசர்க்கார் அலுவலக ஊழியர்கள்

எண்ணிக்கையை குறைக்க முடிவு

புதுடில்லி, ஜுன் 7—

நான்காம் வகுப்பு ஊழியர்கள் —அதாவது பியூன்கள், வேலையாட்கள் முதலியோர், இனி டில்லி சர்க்கார் அலுவலகங்களில் புதிதாக நியமிக்கப்படக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஏராளமான வேலையாட்களை வைத்துக்கொள்வது வெள்ளையர் காலப் பழக்கம் என்றும், எனவே அந்தப் பழக்கம் நீடிக்காமல் தடுக்கவேண்டும் என்றும், அந்த நோக்கத்துடனேயே புதிய வேலையாட்களைச் சேர்த்துக்கொள்வதில்லை என்று முடிவாகியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இப்போதுள்ள அத்தகு வேலையாட்கள் எவரும் வேலையிலிருந்து நீக்கப்படமாட்டார்கள் என்றும், ஏற்கனவே உள்ளவர்கள் வழக்கம் போல ஓய்வு பெறுதல், நீக்கப்படுதல் போன்ற முறைகளில்தான் குறைக்கப்படுவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

குமாஸ்தாக்கள்

மூன்றும் வகுப்பு ஊழியர்களான குமாஸ்தாக்களும்கூட, அத்தியாவசியமாகத் தேவை என்றால்தான் புதிதாகச் சேர்க்கப்படுவர் என்றும் கூறப்படுகிறது.

காஷ்மீர் சட்டசபைத் தேர்தல்

ஆளுங்கட்சிக்கே அங்கும் வெற்றி!

ஸ்ரீநகர், ஜுன் 6—

காஷ்மீர் சட்டசபைக்கு நடைபெற்ற தேர்தலில் தேசிய மாநாட்டவர் 75 இடங்களில் 68 இடங்களைக் கைப்பற்றியிருக்கின்றனர்.

எஞ்சிய எழு இடங்களில் பிரஜா பரிஷத் 5 இடங்களையும் ஹரிஜன் மண்டல் ஒரு இடத்தையும் ஒரு சுயேச்சை மற்றொரு இடத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

காஷ்மீர் அரசியல் சட்டப்படி சட்டசபைக்கு 100 இடங்கள் உண்டு. இதில் 75 இடங்களுக்கே இப்போது தேர்தல் நடைபெற்றுள்ளது; எஞ்சிய 25 இடங்கள் பாகிஸ்தான் ‘வச’முள்ள மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சுமார் மூன்று கோடிப் பேருக்கு

பி. சி. ஜி. ஊசி

புதுடில்லி, ஜுன் 8—

கடந்த பிப்ரவரித் திங்கள் முடிய இந்தியாவில 290 இலட்சம் பேர்களுக்கு பி. சி. ஜி. ஊசி குத்தப்பட்டதாக டில்லி சுகாதார இலாகா அறிக்கை ஒன்று கூறுகிறது.

சுமார் 850 இலட்சம் பேர்கள், காச நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார்களாவெனப் பரிசோதிக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இந்த காச நோய் பற்றி ஆராய்ச்சி நடத்த டில்லி சர்க்கார் ரூ. 6 இலட்சம் வழங்கியிருப்பதாகவும், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் இந்த ஆராய்ச்சியை மேற்கொள்ளும் என்றும், 1954ம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனக் குழு மேற்கொண்ட பி. சி. ஜி. இயக்கத்தையும் இந்த ஆராய்ச்சிக் கழகமே இப்போது மேற்கொண்டிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

அதிகப்படி ஏற்றுமதிக்கு பரிசு

புதுடில்லி, ஜுன் 7—

ஏற்றுமதி துறையில் சிறப்பாக சேவை செய்யும் தயாரிப்பாளருக்கு குடியரசுத் தலைவர் விருதோ அல்லது வேறு விதமான பரிசு அளிக்கப்பட வேண்டும் என்று ஏற்றுமதி ஆலோசனை குழுவில் கிர்லோஸ்கர் தெரிவித்துள்ளார்.

‘கிளேஸ் கிட்’ தோல் தயாரிப்புக்கு

புதிய பக்குவ முறை

தோல் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது

புதுடில்லி, ஜுன் 8—

சென்னை மத்திய தோல் ஆராய்ச்சி நிலையத்தில் செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சிகளின் பலனாய் உயர்ரகமான, வழுவழுப்பான (கிட் லெதர்) ஆட்டுக் குட்டித் தோல் இந்தியாவிலேயே தயாரிக்கப்படலாம்.

இவ்வாறு இந்தியாவில் இந்தத் தோல் தயாரிக்கப்படுவதன் மூலம் இப்போது கச்சாவாக ஏற்றுமதி செய்யப்படுகிற தோல் மூலம் கிடைக்கிற வெளிநாட்டு நாணயத்தைப்போல் மூன்று மடங்கு நாணய வசதி கிடைக்கும்; மேலும் இப்போது அந்த ரகத் தோல் இறக்குமதி செயயப்படுவது நின்றுவிடுமாகையால் அதனாலும் மிச்சம்ஏற்படும். இந்தியாவில் சுமார் 225 இலட்சம் வெள்ளாட்டுத் தோல் வருஷந்தோறும் தயாராகிறது; அதில் 75% கச்சா தோலாக பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது; அதனால் சுமார் 700 இலட்சம் ரூபாய் கிடைக்கிறது.

இந்நிலையத்தில் வழுவழுப்பான ‘கிட்’ தோல் தயாரிப்பதற்கு 12 பக்குவ முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தத் தோல்கள் குரோம் பதன முறைப்படி வெள்ளாட்டுத் தோலிலிருந்து தயாரிக்கப்படுகிறது. உயர் ரக பாதரட்சைகள் தயாரிப்புக்கு, முக்கியமாக பெண்கள் பாதரட்சைத் தயாரிப்புக்கு அது உபயோகமாகிறது.

புதிய வரிகள்: நாடெங்கும் கண்டனம்

புதிய வரிகளைக் கண்டித்து நாடெங்கும் நடத்தப்பட்ட கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவைகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

சென்னை-கோடம்பாக்கம்:

26—5—57 பிற்பகல் 3 மணி அளவில் கிளைக் கழக பணிமனையில் இருந்து தோழர் சா. நெடுமாறன் தலைமையில் புது வரிகள் கண்டன ஊர்வலம் ஒன்று புறப்பட்டு 35-வது வட்ட முக்கிய வீதிகள் வழியாகசென்றுபணிமனைக்கு திரும்பிவந்து முடிவுற்றது.

மாலை 6 மணி அளவில் தோழர் நெடுமாறன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது; அதுபோது தோழர்கள் குமார், தரணி, சோ. கிருட்டிணமூர்த்தி, சா. வில்லவன் ஆகியோர் புது வரிகளைக் கண்டித்துப் பேசியபின், செயலாளர் கொண்டுவந்த 3 தீர்மானங்கள் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேறின.

கம்பம்:

26—5—57 அன்று மத்திய சர்க்காரின் புதிய வரி உயர்வைக் கண்டித்து கார்திமதி நிலையத்திலிருந்து ஒரு ஊர்வலம் புறப்பட்டு வ. உ. சி. திடலை அடைந்தது. அங்கு தோழர் வி. இராமசாமி அவர்கள் தலைமையில், தோழர்கள் மு. வசனப்பித்தன், தம்பிதுரை ஆகியோர் தற்போது விதித்திருக்கும் வரி உயர்வைக் கண்டித்துப் பேசினார்கள். கூட்டத்தில் ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கன்னிகுளம்:

26—5—57 மாலை 5 மணிக்கு கன்னிகுளம் திராவிட முன்னேற்றக் கழக ஆதரவில் இந்திய சர்க்காரின் புதிய வரி விதிப்பைக் கண்டித்து தோழர் ஆ.ஞா. இராசன் தலைமையில் ஒரு ஊர்வலம் நடைபெற்றது. அதன் பின்னர் நடைபெற்றக் கூட்டத்தில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மதுக்கரை:

3—6—57 இரவு 7½ மணிக்கு மதுக்கரை தி. மு. கழகச் சார்பில் வரி உயர்வு கண்டனப் பொதுக் கூட்டம் தோழர் க. இருசப்பன் தலைமையில் நடைபெற்றது. வரி உயர்வை கண்டித்து ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் தோழர்கள் சி. பாலகிருஷ்ணன், தங்கமாணிக்கம், கோவை-மு. இராமநாதன் ஆகியோர் வரி உயர்வை கண்டித்துப் பேசினர்.

குடந்தை:

26—5—57 மாலை 6 மணிக்கு தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் வரி எதிர்ப்பு ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர். இவ்வூர்வலம் பல முக்கிய வீதிகள் வழியாக ஜூபிலி பார்க் வந்தடைந்தது. இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

போடிநாயக்கனூர்:

30—5—57 மாலை 4 மணிக்கு புதிய வரிகளைக் கண்டித்து ஒலி முழக்கத்துடன் ஊர்வலமாகப் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக பொதுக்கூட்டம் நடைபெறும் தியாகராயர் திடலில் முடிவடைந்தது. இரவு 7 மணிக்கு தோழர் அழகர்சாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் கே. எஸ். சந்தானம், கலைமணி, சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர். முடிவில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெருமகளூர்:

26—5—57 அன்று பிற்பகல் 3 மணிக்கு புதிய வரிகள் கண்டன ஊர்வலம் திரு. வி. க. திடலினின்று புறப்பட்டு ஊரின் முக்கிய வீதிகளின் வழியாக புதிய வரிகளை கண்டிக்கும் ஒலிகளை முழக்கியவண்ணம் சென்று முடிவடைந்தது.

கோவை—10-வது வட்டம்:

2—6—57 காலை 9 மணியளவில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தற்போது மத்திய சர்க்கார் விதித்துள்ள வரிகளைக் கண்டித்து மூன்று தீர்மானங்களும்; தூத்துக்குடி, மதுரை முதலிய இடங்களில் தாக்கப்பட்ட நமது தோழர்கட்கு அனுதாபத்தை தெரிவித்து ஒரு தீர்மானமும், மற்றும் சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தளவாய்புரம்:

26—5—57 மாலை 4 மணிக்கு தி. மு. கழகக் கட்டிடத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. கூட்டமுடிவில் புதுவரிகளைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவில்லிபுத்தூர்:

26—5—57 திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக புதிய வரிகளைக் கண்டித்து ஓர் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடைபெற்றது; மாரியம்மன் கோவில் திடலில் தோழர் மா. குருசாமி அவர்கள் தலைமையில் தோழர் சி. பொன்னுச்சாமி, சி. பி. அண்ணாமலை, கே. ஆர். பி. மணிமொழியன் ஆகியோர் புதிய வரிகளைக் கண்டித்துப் பேசினார்கள். இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சிவகங்கை:

26—5—57 மாலை 5 மணியளவில் நகர தி. மு. கழகச் சார்பில் இவ்வூர் அரண்மனை வாயில் முன்பிருந்து மத்திய சர்க்காரின் புதிய வரி விதிப்பைக் கண்டிக்கும்முகத்தான் ஓர் மாபெரும் ஊர்வலம் தோழர் கு. சுப்பிரமணியன் தலைமையில் புறப்பட்டு நகர முக்கிய வீதிகளின் வழியாக அரண்மனை வாயில் வந்தடைந்தது. பின்பு தோழர் அ. வெங்கிடுசாமி தலைமையில் தோழர் மணவாளன் வரி விதிப்பினால் ஏழைகள் மிகவும் பாதிக்கப்படுவதைக் குறித்து பேசினார். கூட்டத்தில் புதிய வரிகளைக் கைவிடுமாறும் தூத்துக்குடி மறைந்த மாவீரன் தாளமுத்து மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாயூரம்:

27—5—57 இரவு 8 மணிக்கு மாயூரம் நகர தி. மு. கழகத்தின் சார்பில் தோழர் வி. அண்ணாமலை தலைமையில் நகரப் பூங்காவில் புது வரிகள் கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் என். கிட்டப்பா கண்டனத் தீர்மானத்தைப் படிக்க பொதுமக்களின் பெருத்த கையொலியோடு தீர்மானம் நிறைவேறியது.

பின்னர் தில்லை-வில்லாளன் பேசியபின், இறுதியாக பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் புதிய வரிகளைக் கண்டித்தும் அரசியலாரின் போக்கினை இடித்துரைத்தும் நீண்ட நேரம் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

பொதுச் செயலாளர் அவர்களுக்கு பல மன்றங்கள், கழகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

லெப்பைக்குடிக்காடு:

26—5—57ல் புதிய வரிகளைக் கண்டித்து தோழர் கு. அ. அமீது தலைமையில் ஓர் கண்டன ஊர்வலமும், தோழர் கே. வி. எ. சுக்கூர் தலைமையில் ஓர்கண்டனப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது; கூட்டத்தில் தோழர்கள் வி. எஸ். சமத், சு. அமராவதி, பிச்சமுத்து, இரா. நாராயணன் ஆகியோர் பேசினர். தோழர் முகம்மதலியால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

கொட்டாரக்குடி:

26—5—57 காலை 9 மணிக்கு, தோழர் கொ. அ. சௌரிராசன் அவர்கள் தலைமையில் ஓர் ஊர்வலம்புறப்பட்டு சோழங்கநல்லூர், வடகுடி, வடஓடை, கடம்பங்குடி ஆகிய சிற்றூர்களின் வழியாகச் சென்று மாலை கொட்டாரக்குடியை அடைந்தது.

பின்னர், மாலை 6 மணியளவில் சோழங்கநல்லூரில் தோழர் நா. வெ. சலபதி தலைமையில் புது வரிகளைக் கண்டித்துப் பொதுக்கூட்டம் நடந்தது. அவ்வமயம் அண்ணாமலை பல்கலைக் கழக தி. மு. க. மாணவர் கிளையின் பொருளாளர் தோழர் பூவை. நா. இராமானுசம், சி. கோவிந்தராசன், மு. சாகிப், இரெ. பாலகிருட்டிணன் ஆகியோர் புதிய வரி விதிப்பைக் கண்டித்துப் பேசினர்.

புது வரி விதிப்பைக் கண்டித்தும், கழகத் தோழர் மறைவுக்கு இரங்கியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நீலிக்கோனம்பாளையம்:

26—5—57 காலை 9 மணியளவில் (பிள்ளையார் திடல்) பள்ளி மைதானத்திலிருந்து புதிய வரிகள் கண்டன ஊர்வலம் கே. கோபால் அவர்கள் தலைமையில் புறப்பட்டு பல முக்கிய வீதிகளின் வழியாக வந்து இறுதியாக கழகக் கட்டிடம் அடைந்தது. அன்று மாலை கே. கோபால் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பலர் புதிய வரிகளைக் கண்டித்துப் பேசிய பின் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதுகும்மிடிபூண்டி:

26—5—57ல், தோழர் சி. என். முனுசாமி, அவர்கள் தலைமையில், புதிய வரிகள் கண்டன ஊர்வலம் முக்கிய வீதிகளில் சென்றது. இரவு 8 மணியளவில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. புதிய வரிகள் மக்களை பாதிப்பதை விளக்கி பல தோழர்கள் பேசினர்.

இராசபாளையம்:

29—5—57ல், இராசபாளையம் தி. மு. கழகத்தின் சார்பில் புது வரிகள் கண்டன ஊர்வலமொன்று தோழர் த. இராமசந்திரன் தலைமையில் கழகப் பணிமனையிலிருந்து புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியாக புதிய பஸ் நிலையம் வந்தடைந்தது. இறுதியில் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

வேதாரண்யம்:

26—5—57 மாலை 5 மணிக்கு, சிவ. கனகசுந்தரம் அவர்கள் இல்லத்திலிருந்து செயலாளர் ஒ. அ. மு. அய்யாத்துரை அவர்கள் தலைமையில் கண்டன ஊர்வலம் நடைபெற்றது. பின்னர் கிளைக் கழகக் கூட்டம் சிவ. கனகசுந்தரம் அவர்கள் இல்லத்தில் கூடி புதிய வரியை கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாகை:

26—5—57ல் மேலகோட்டை வாயிலிருந்து ஓர் மாபெரும் கண்டன ஊர்வலம் தோழர் கெ. பாப்பையன் தலைமையில் புறப்பட்டு, நகரின் பல வீதிகளின் வழியே புதிய வரிகளை எதிர்த்து கோஷங்களை முழங்கிக்கொண்டு சென்று கடைசியாகநகர வழியாக நகர தி. மு. கழக பணிமனையில் நடைபெற்ற கண்டன கூட்டத்துடன் முடிவுற்றது. கூட்டத்திற்கு தோழர் என். விசயராகவன் தலைமை வகித்தார். தோழர்கள் ஜி. செல்வராசு, எம். இ. ராசு, பி. எச். முஸ்தப்பா, எ. எஸ். பாண்டியன ஆகியோர் புதிய வரிகளின் கொடுமைகளை விளக்கிப் பேசினர். இறுதியில் புதுவரிகளைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதிய இரயில் பாதை அமைப்புகள்

வட நாட்டில் நடைபெற்றுள்ள வேலைகள் குறித்து சில விவரங்கள்

முதலாவது திட்ட காலத்தில், யுத்தத்தின்போது பிரிக்கப்பட்ட இரயில் மார்க்கங்களில் 430 மைல் தூரத்துக்கு மீண்டும் இரயில் பாதைகள் போடப்பட்டன; புதிதாக 380 மைல் தூரத்திற்கு இரயில் பாதை அமைக்கப்பட்டது; 46 மைல் நீளமுள்ள நாரோ கேஜ் மார்க்கம் மீட்டர் கேஜ் மார்க்கமாக மற்றியமைக்கப்பட்டதாம்.

முதல் திட்ட காலக் கடைசியில், பத்துப் புதிய மார்க்கங்களில் மொத்தம் 453 மைல் தூரத்திற்கு இரயில் பாதை அமைப்பு வேலை நடைபெற்றுவந்தது; 52 மைல் நீளமுள்ள பாதைகள் பிராட் கேஜாக மாற்றியமைக்கப்பட்டு வந்தன; 2,000 மைல் நீளமுள்ள புதிய மார்க்கங்களுக்காக சர்வே வேலை நடைபெற்றுவந்ததாம்.

'சுதந்திர'த்திற்குப் பிறகு, மொத்தம் 19 புதிய மார்க்கங்கள் (758·92 மைல்) போக்கு-வரத்துக்குத் திறந்துவிடப்பட்டன; அவைகளில் 12 மார்க்கங்கள் முதலாவது திட்ட காலத்தில் நிறைவேற்றப்பட்டவையாகும்.

இந்தப் புதிய மார்க்கங்களில் முக்கியமானது அஸ்சாம் இரயில் இணைப்பாகும்; அதன் நீளம் 142 மைல். நிலைமை எவ்வளவோ மோசமாக இருந்தபோதிலும் அப்பகுதியில் வேலை நிர்ணயித்திருந்த காலத்துக்கு வெகுவாக முன்னதாகவே பூர்த்தியடைந்துவிட்டதாம்.

முக்கேரியன் — பதான்கோட் மார்க்கத்தில் 1949 நவம்பரில் வேலை ஆரம்பிக்கப்பட்டது; 1952 ஏப்ரல் 7-ந் தேதி அந்த மார்க்கம் போக்கு - வரத்துக்குத் திறந்துவிடப்பட்டது. 27 மைல் நீளமுள்ள இப்புதிய மார்க்கம் போடப்பட்டவுடன், டில்லி—பதான்கோட் பிரயாண தூரம் 44 மைல் குறைந்துவிட்டது.

காண்ட்ளா (காந்திதாம்)—தீஸா இரயில் மார்க்கம் (170 மைல்) 1952 அக்டோபர் 2-ந் தேதி போக்கு - வரத்துக்குத் திறந்துவிடப்பட்டது. இதன் மூலம் மேற்குக் கரையிலுள்ள காண்ட்ளாவுக்கும் உட்பகுதிக்கும் இணைப்பு ஏற்பட்டுவிட்டது.

இரண்டாவது திட்ட காலத்தில் மேற்கொள்ளப்படுகிற இரயில்வே அபிவிருத்தித் திட்டங்களின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—1,607 மைல் நீளமுள்ள தடத்தை இரட்டைத் தடமாக அமைப்பது; 265 மைல் நீளமுள்ள மீட்டர் கேஜ் மார்க்கங்களை பிராட் கேஜாக மாற்றி அமைப்பது; சில பிரிவுகளை (மொத்தம் 825 மைல்) மின்சார மார்க்கங்களாக மாற்றியமைப்பது; 1,293 மைல் தூர மார்க்கத்தை டீசல் எஞ்சின் போக்கு-வரத்து மார்க்கமாக மாற்றுவது; 842 மைல் தூரத்துக்கு புதிய மார்க்கங்கள் போடுவது; மிகப் பழசாய்ப்போன மார்க்கங்களை (8,000 மைல் புதுப்பிப்பது.

நிலக்கரி சுத்திகரிப்பு

கர்காலில் தொழிற்சாலை

புதுடில்லி, ஜுன் 8—

கர்காலி என்னும் இடத்தில் மொத்தம் 2·5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட இருக்கும் நிலக்கரி சுத்திகரிப்பு சாலை மணி ஒன்றுக்கு 500 டன் வீதம் சுத்தமான நிலக்கரியை தயாரிக்குமாம்.

பொக்கரோ, கர்காலி ஆகிய பகுதிகளில் வெட்டி எடுக்கப்படும் நிலக்கரி முழுவதும் இங்கு சுத்திகரித்து அனுப்பப்படுமாம்.

இந்த இரண்டு சுரங்கங்களிலும் ஆண்டொன்றுக்கு சுமார் 22 இலட்சம் டன் நிலக்கரி விதம் வெட்டி எடுக்கப்படுகிறதாம்.

கர்காலில் சுத்திகரித்து அனுப்பப்படும் நிலக்கரி பிலாய் உருக்கு தொழிற்சாலை, ரூர்கேலா உருக்கு தொழிற்சாலை ஆகியவைகளின் தேவையை பூர்த்திசெய்ய போதுமானதாக இருக்குமாம்.

சப்பானிய பொறியியல்நிபுணர் மேற்பார்வையில் இந்த தொழிற்சாலையின் வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றனவாம். 1959 சனவரி திங்களில் தொழிற்சாலை இயங்குவதற்கு தயாராகயிருக்குமாம்.

இன ஒதுக்கலுக்கு கண்டனம்

பேராசிரியர்,பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்

கேப்டவுன், ஜுன் 7—

கேப்டவுன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், பட்டதாரிகள், மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட 2,500பேர்இன்று கேப் டவுன் நகர தெருக்களில் ஊர்வலமாகச் சென்று இன ஒதுக்கல் ஏற்பாட்டைக் கண்டித்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

மூன்று வருஷ பட்டப் படிப்பு திட்ட அமுல்

புதுடில்லி, ஜுன் 8—

மூன்று வருஷ பட்டப் படிப்பு சம்பந்தமாக மதிப்பீடுகள் குழு செய்திருந்த சிபாரிசுகளை டில்லி சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களாம். மாநில சர்க்கார்கள், பல்கலைக்கழக மானியக் கமிஷன் ஆகியவர்களைக் கலந்து கொண்டு அத்திட்டத்தை எவ்வளவு சீக்கிரமாக அமுலுக்கு கொண்டுவர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறப்படுகிறது.

சர்க்காருக்கு அதன் அறிக்கையை சமீபத்தில் அக்குழு தாக்கல் செய்துள்ளது. அதில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு குறைந்தபட்சம் ரூ. 25 கோடி செலவாகுமென்று அது மதிப்பிட்டிருக்கிறதாம்.

அக்கமிட்டியில் சி. டி. தேஷ்முக் தலைவர்; மத்திய கல்வி மந்திரி அலுவலகச் செயலாளர்; கே. ஜி. சைதையின், சென்னை, கல்கத்தா, டில்லி பல்கலைக் கழக துணைவேந்தர்கள், மாநில சர்க்கார்களின் நான்கு பிரதிநிதிகள் ஆகியோர் இருந்தார்கள்.

அ. பொன்னம்பலனர்

நலமே மலாயா சேர்ந்தார்

சென்னையிலிருந்து கடந்த 25—5—57 அன்று எஸ். எஸ். ரஜுலா கப்பல் மூலம் மலாயா புறப்பட்ட தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள் 31—5—57 அன்று பினங்கு சேர்ந்து அங்கிருந்து 3—5—57 அன்று இரவு சிறம்பான் நகருக்கு நலமே போய்ச் சேர்ந்தார்.

சிறம்பான் செல்லும் வழியில் 1—6—57 அன்று பினங்கு தமிழர் இளைஞர் மணி மன்ற வாரக் கூட்ட நிகழ்ச்சியிலும், 2—6—57 அன்று பினங்கு இந்து சபா ஆதரவில் நடைபெற்ற திருவள்ளுவர் தின நிகழ்ச்சிகளிலும் தோழர் பொன்னம்பலனர் அவர்கள் கலந்து கொண்டார்.

தமிழகத்திலும் பினங்கு துறைமுகத்திலும், ஈப்போ, கம்பார், சுங்கை, கோலாலம்பூர் ஆகிய இடங்களிலும் வாழ்த்துக் கூறியும் வழிஅனுப்பிவைத்தும் வரவேற்று உபசரித்த நண்பர்கட்கு பொன்னம்பலனர் அவர்கள் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

விலை உயர்வின் எதிரொலி

பாங்கிகளுக்குப் புதிய உத்தரவு

பம்பாய், ஜூன் 10—

உணவுத் தானியங்கள் மீது பெருந் தொகைகள் கடன் தரப் படுவதால் அவைகளின் விலை உயர்ந்துவிடுகிறது என்று ரிசர்வ் பாங்கி இப்போது கருதுகிறது.

அரிசி, நெல், கோதுமை, பருப்பு வகைகள்மீது பெருந் தொகைகள் கடன் தரப்படுவதைக் கணிசமாகக் குறைக்க வேண்டும் என்று பாங்கிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

உணவுத் தானியங்களின் மதிப்பீட்டை 40 சதவிகிதம் குறைத்து மதிப்பிட வேண்டும் என்றும் எல்லாப் பாங்கிகளுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

1957 ஏப்ரல் இறுதியில் நெல், அரிசிமீது ரூ. 22 கோடி கடன் தரப்பட்டுள்ளது என்று ரிசர்வ் பாங்கி கணக்கெடுத்துள்ளது.

சென்ற ஆண்டைக்காட்டிலும் இது 85 சதவிகிதம் அதிகமாம்.

தாளமுத்து படுகொலை வழக்கு

கம்யூனிஸ்டு நீதிராஜன் உட்பட 10 எதிரிகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல்

தூத்துக்குடி, ஜூன் 10—

தூத்துக்குடி கழக வீரர் தாளமுத்து, கடந்த மே 22-ந் தேதி அன்று படுகொலை செய்யப்பட்டதை ஒட்டி, இன்ஸ்பெக்டர் இராமசாமிப்(பிள்ளை) 10 பேர்மீது தூத்துக்குடி சப்-மாஜிஸ்திரேட் முன்னிலையில் வழக்கு ஒன்று பதிவு செய்திருக்கிறார்.

கம்யூனிஸ்டான (1) நீதிராசன் (செல்லையா நாடார் மகன்); (2) அய்யம்பிள்ளை மகன் இராமநாதன்; (3) செந்தூர் என்ற இராமசாமி நாடார்; (4) பிரமநாதபிள்ளை மகன் செந்தூர் பாண்டியன்; (5) பெரியநாடார் மகன் செல்லையா; (6) சுந்தர பணிக்கர் மகன் அருணாசல பணிக்கர்; (7) சிவணு நாடார் மகன் நடராசன்; (8) ஜோசப் மகன் ஜேசையா; (9) மானியூடிரோஸ் மகன் சேவியர்டிரோஸ்; (10) வனந்தரலிங்க நாடார் மகன் அதிரசம் என்ற ராசபாண்டியன் ஆகிய பத்து பேர் மீதும்-இவர்கள் அனைவரும் அரிவாள், கத்தி, மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் கூடி தி. மு. கழக வீரரும், தூத்துக்குடி நூற்பு ஆலைத் தொழிலாளர் சங்க முன்னாள் செயலாளருமான தாளமுத்துவை, அவர் மீது கொண்டிருந்த விரோதம் காரணமாக அவரையும், அவருடன் வந்த ராஜு என்ற தையல் காரரையும் தாக்கியதின் விளைவாக ராஜு தப்பித்துக்கொண்டாலும் தாளமுத்து பலியாகியிருக்கிறார் என்று இ. பி. கோ. 147,148,302,149 பிரிவுகளின்படி அவர்கள்மீது வழக்குத் தொடருவதாக போலீஸ் இன்ஸ்பெக்டர் கூறியிருக்கிறார்.

இன்னும் தொடர்ந்து புலன் விசாரணை செய்யவும், சாட்சிகளை விசாரிக்கவுமாக காலம் தேவைப்படுவதால், எதிரிகளின் காவலை இன்னும் 15 நாட்களுக்கு நீடிக்கவேண்டும் என்ற போலீஸ் தரப்பு வேண்டுகோளுக்கு நீதிபதி சம்மதித்திருக்கிறார் என்றும் தெரிகிறது.

'HOMELAND'

★

'ஹோம்லண்ட்' முதல் இதழ் (9—6—57) 11—6—57 செவ்வாயன்று காஞ்சீபுரத்திலிருந்து அனுப்பிவைக்கப்படுகிறது என்பதை ஏஜண்டுகள், சந்தாதாரர்கள் மற்றும் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி : ஹோம்லண்ட், காஞ்சீபுரம்

கழகக் கூட்டங்கள்

★

கல்லல் :
காந்தி சதுக்கம்
11-6-57 மாலை 6-30 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
துவக்குபவர் :
ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
பேசுவோர் :
ஏ. குருசாமி
இராம. வெள்ளையன்

★

கீ. கா. குறிச்சி :
(திருச்சி மாவட்டம்)
12—6—57 அன்று
தி. மு. கழகத் திறப்புவிழா
தலைவர் : சி. முத்துசாமி
பேசுவோர் :
போன். தருமலிங்கம்
குடந்தை காளிதாஸ்
சா. இராமசாமி

★

தேனி :
தேனி கிழக்குச் சந்தையில்
12—6—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : வீ. இராசு
பேசுவோர் :
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ
ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
எஸ். எஸ். இராசேந்திரன்
டி. வி. நாராயணசாமி
வி. வி. குருசாமி
மு. தங்கராசன்

★

அண்ணமங்கலம் :
12—6—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
போ. தருமன்
இராமசாமி
துரை. வையாபுரி
சுந்தரம்
காளிதாஸ்

★

சுள்ளங்குடி :
11—6—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
போ. தருமன்
இராமசாமி
துரை. வையாபுரி
காளிதாஸ்
சுந்தரம்

பொள்ளாச்சி வேலாயுத மன்றப் பொதுக்கூட்டம்

12—6—57 மாலை 7-மணிக்கு மேற்படி மன்றப் பொதுக்கூட்டம், பொள்ளாச்சி மார்க்கெட் ரோடு திருவள்ளுவர் திடலில், தோழர் பி. நடராசு தலைமையில் நடைபெறும்; அதுபோது தோழியர் பொற்செல்வி இளமுருகு, தோழர்கள் இளமுருகு பொற்செல்வி, சு. கிருட்டிணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

வேதாரண்யத்தில் பாராட்டுக்கூட்டம்

12—6—57-ல் வேதாரண்யம் மேலவீதியிலுள்ள ஊராட்சிமன்ற பூங்காவில் பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ. அவர்களைப் பாராட்டி ஓர் பொதுக் கூட்டம் தோழர் சிவ. கனகசுந்தரம் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் அறிவுடைநம்பி, எஸ். வைத்தியநாதன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். தோழர் அன்பழகன் நன்றியுரையாற்றுவார்.

வானொலிப் பெட்டி திறப்பு விழா

12—6—57 பிற்பகல் 3 மணியளவில் வேதாரண்யம் மீனவர் சங்கச் சார்பில் 'வானொலிப் பெட்டி' திறப்பு விழா பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ.,எம்.எல்.ஏ. அவர்களால் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

12—6—57 மாலை 6 மணிக்கு சேலம் அம்மாப்பேட்டை 23-வது வட்ட தி. மு. கழகத்தின் சார்பில், தோழர் கே. எம்.கிருட்டிணன் இல்லத்தில் தோழர் கோ. ஆ. பழனிசாமி தலைமையில் சொற்பயிற்சிக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

'ஆடம்பர வரவேற்புகளில் கலந்து கொள்ளாதீர்'

மத்திய மந்திரிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

ஜலந்தர், ஜூன் 9—

மத்திய உருக்கு—சுரங்கம்—எரிபொருள் இலாகா மந்திரியான சர்தார் சுவரண்சிங்கிற்கு எதிராக பி. சோ.; கம்யூனிஸ்டு கட்சி, தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் ஆகியவைகள் கூட்டாகச் சேர்ந்து ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தியிருக்கின்றன.

"நாட்டில் உணவுத் தட்டுப் பாடுஏற்பட்டிருக்கும்போது-புதிய வரிவிதிப்புகள் ஏற்பட்டிருக்கும்போது ஆடம்பரமான விருந்துக்களுக்குப் பணம் செலவிடுவது கூடாது"

என்று கண்டன முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகையில் பி. சோ. கட்சி செயலாளரை சில காங்கிரஸ் தொண்டர்கள் தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

இது குறித்தும் மந்திரியிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் முறையிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

காங்கிரசார் விட்டுச் சென்ற இலட்சங்கள் !

சென்னை, ஜூன் 10—

சமீபத்தில் காலஞ் சென்ற முதலமைச்சர் ஒருவர் ரூ. 90 இலட்சம் விட்டுச் சென்றுள்ளாராம்! காங்கிரஸ் சட்டசபைத் தலைவர் ஒருவர் ரூ. 50 இலட்சம் விட்டுச் சென்றுள்ளாராம் !

இவர்களில் யாருக்குமே முன்னோர் வைத்துச் சென்ற சொத்துக்கள் கிடையாதாம் ! இவர்கள் வியாபாரத்தின் மூலமோ, தொழில் மூலமோ இதைச் சேர்க்கவில்லையாம் !

இந்தத் தகவலை சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் லோகியா வெளியிட்டதுடன், 'இது நாட்டின் கேவல நிலையை காட்டுகிறது. இந்த நிலைமையிலிருந்து விடுபட சட்ட மறுப்பைத் தவிர வேறு வழியில்லை' என்றும் தெரிவித்துள்ளார் எனத் தெரிகிறது.

'தலைமை'யின்கட்டளையை ஏற்க மறுப்பு !

பம்பாய் சட்டசபையில் பி. சோ. கட்சி மகாராஷ்டிரா சமிதியுடன் கூட்டாக இயங்கி வருகிறது.

இனி அவ்வாறு கூட்டாக இருப்பது கூடாது என்றும், தனியாகவே இயங்க வேண்டுமென்றும் பி. சோ. தலைமை உத்திரவிட்டுள்ளதாம்.

அந்த உத்திரவை மகாராஷ்டிரப் பகுதியைச் சேர்ந்த பி. சோ. கட்சி ஏற்க மறுத்துள்ளது.

இந்த முடிவு, தலைமையை மீறும் நோக்குடன் செய்யப்பட்டதல்ல என்றும், உள்ள நிலைமைக்கு ஏற்ற முறையில் செய்யப்பட்டது என்பதை உணரவேண்டும் என்றும் தேசிய நிர்வாகக் குழு தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது.

தற்போது சட்டசபையில் சமிதியுடன் கூட்டாக பி. சோ., கம்யூனிஸ்டு, இந்து மகா சபை, சன சங்கம், வெளியேறிய காங்கிரஸ்காரர்கள் உள்ளனர்.

'திட்டங்கள்' பல சரிந்து விழ்கிறது !

காரணம் கூறுகிறார் அமைச்சர்

பம்பாய், ஜூன் 9—

புதிய இரயில்வே பிளாட்பாரங்கள்—பிளாட்பாரம் விஸ்தரிப்பு—அழகான தங்கும் அறைகள்—குளிர்சாதன வசதியுடன் கூடிய பல மாடிக் கட்டிடங்கள்! — இன்னும் இப்படிப் போன்றவை பல, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று, தேர்தலுக்கு முன் மக்களிடையே பெருமையாகப் பேசப்பட்டவைகள், இப்போது கைவிடப்பட்டுள்ளனவாம்.

சிமெண்டு, உருக்கு போன்ற சாமான்கள் பற்றாக்குறையே இதற்குக் காரணமாம்.

(4-ம் கலம் பார்க்க)

(1-ம் கலத் தொடர்ச்சி)

'ஆனல் புதிய இரயில் பாதைகள் கட்டுவது மற்றும் நிறைவேற்றப்படும்' என்று இரயில்வே அமைச்சர் செகசீவன்ராம் தெரிவித்துள்ளார்.

திருத்தணியைத் தரமாட்டார்களாம்!

திருவள்ளூர், பொன்னேரி பகுதிகள் வேண்டுமாம்!

ஆந்திர சர்க்காரின் கோரிக்கைகள் !

ஐதராபாத், ஜூன் 9—

சேலம் மாவட்டத்தில் ஒசூர் தாலுகாவையும், கிருஷ்ணகிரி வட்டத்தில் வேப்பனப்பள்ளி பிர்க்காவையும் தந்தால் சித்தூர் மாவட்டத்தில் மரல்பளிப் பகுதியை தமிழகத்திற்குத் தந்துவிடத் தாங்கள் சம்மதிப்பதாக ஆந்திர பிரதேச சர்க்கார், மத்தியஸ்தரான படாஸ்கரிடம் தெரிவித்திருப்பதாக, அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறாராம்.

மேலும் ஆந்திர சர்க்கார், திருவள்ளூர், பொன்னேரி வட்டங்களில் தென்பகுதியையும் தங்களுக்கு வேண்டுமெனக் கேட்டிருக்கிறார்களாம் !

அத்துடன் திருத்தணி வட்டத்தைத் தமிழருக்குத் தருவதற்கில்லை என்றும் கூறியிருக்கிறார்களாம் !

படாஸ்கர், ஆந்திர சர்க்காரின் கருத்துக்களைப் பொருமையோடு கேட்டுக் கொண்டிருந்தாகவும், அவர் ம. பி. கவர்னராகப் பதவி ஏற்குமுன் தீர்ப்புக் கூறுவார் என்றும் தெரிய வருகிறது.

மக்கள் சபைத் தலைவரான அனந்தசயனம் அய்யங்காரும் படாஸ்கரைச் சந்தித்துத் தனது கருத்தைத் தெரிவித்ததாகவும், அவர், திருத்தணி ஆந்திராவுடனேயே இருக்க வேண்டும் என்று கூறியதாகவும் தெரிய வருகிறது.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

ஜுன் 11 : நச்சினார்க்குடி
12 : சித்தாய்மூர்
13 : சோமரசம்பேட்டை
15 : சோழவந்தான்
17 : திருப்பாச்சேத்தி
18 : கோட்டையிருப்பு
19 : நத்தம்
20 : திருப்புவனம்
23 : காலை—சென்னை (இராயப்பேட்டை திருமணம்)
26, 27, 28, 29 : மன்னார்குடி பகுதிகள்
30 : கட்டிமேடு

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

ஜுன் 11 : பேராவூரணி
12 : வேதாரண்யம்
13 : அதிராம்பட்டினம்
14 : இராசகிரி
15 : சீர்காழி
16 : புதுச்சேரி
17 : சென்னை (திருமணம்)

மாணவர் கழக ஆண்டு விழா

12—6—57 மாலை 5 மணிக்கு வ. ஆ. மாவட்டம்—போளூர் வட்டம், மேலாரணி (வில்வாரணி) உயர்நிலைத் தொடக்கப் பள்ளியின் பழைய மாணவர் கழக 7-ம் ஆண்டு விழா போளூர் டாக்டர் இராசன் தலைமையில் நடைபெறும்; அதுபோது அண்ணு அவர்களும் தோழர் நா. ஆறுமுகம் அவர்களும் சிறப்புரையாற்றுவர். தோழர் பா. சந்திரசேகரன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

திருமணம்

11—6—57காலை 8-30மணிக்கு மாதவரம் முத்துமாரியம்மன் கோவில் வீதி தோழர் ஆர். தன்சிங்—தோழியர் கே. இராதா வாழ்க்கை ஒப்பந்தவிழா தோழர் ஏ. செயராசு தலைமையில் நடைபெறும்; தோழர்கள் கண்ணதாசன், ம. பொ. வேதாச்சலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

20,000 ஆலைத் தொழிலாளர்கள்

புதிய திட்டத்தின்படி நன்மை பெறுவர்?

மதுரை, ஜுன் 10—

மதுரை ஆலைகள் நிறுவனத்தைச்சேர்ந்த மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம் ஆலைகளில் தொழில் கோர்ட் திட்டப்படி திருத்தியமைக்கப்பட்ட வேலைப்பளு, இரவு வேலை 'படி' ஊதியம் முதலியன அமுல் நடத்தப்படுகிறதாம்.

இதனல்20,000 ஆலைத் தொழிலாளர் நன்மை பெறுவர் என்று தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் [illegible]